**யட்டியன்தொட்ட பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்தெம்பர் 24 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து யட்டியன்தொட்ட பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 01 இன் 21 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பின்வரும் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) காசுப்பாய்ச்சல் கூற்று

(ii) தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று

(iii) பாதீடப்பட்ட தொகைக்கும் உள்ளபடியான தொகைக்கும் இடையிலான ஒப்பீட்டுக் கூற்று

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட சொத்து மற்றும் பொறுப்பு மீதிகள் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக கணக்கீடு செய்வதற்குரிய நாட்குறிப்புப் பதிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் கணக்கு சீராக்கங்களுக்குரிய நாட்குறிப்புப் பதிவுகளில் வரவு மற்றும் செலவுப் பதிவுகள் பூர்த்தி செய்யப்படாது காண்பிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் சில பதிவுகளில் தொகைகள் பூர்த்தி செய்யப்படாதும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சொத்துக் கணக்கிற்கும் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கிற்குமிடையே 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட ரூபா 4,006,500 தொகையான வேறுபாட்டை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மோட்டார் வாகனமும் வண்டியின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய ரூபா 104,150 தொகையான 10 விடயங்கள் இயந்திரம் மற்றும் உபகரணக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் பௌதீக ரீதியில் காணப்படாத ரூபா 910,800 தொகையான கட்டிடம், 13 சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(உ) முன்னைய ஆண்டின் இறுதியில் ஊழியர் கடன் கணக்கின் மீதி ரூபா 3,413,892 ஆக இருந்த போதிலும், அது மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 4,092,914 ஆக முன் கொண்டுவரப்பட்டமையால் ஊழியர் கடன் கணக்கு ரூபா 679,022 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட ஐந்தொகையின் படி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளுக்கிடையே ரூபா 380,303 தொகையான வேறுபாடு காணப்பட்டதுடன் அதன்படி மூலதன ஈடுபடுத்தலை விட தேறிய சொத்துக்களின் பெறுமதி அதற்குச் சமமாக அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தனியார் ஊடக நிறுவனமொன்றிற்குச் செலுத்த வேண்டிய ரூபா 59,119 தொகை கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

09 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகள் / உபயோகப் பதிவேடுகள் அறிக்கைகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 134,548,837 ஆக இருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 164,750,087 ஆனமையால் ரூபா 30,434,006 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| (அ) சப்ரகமுவ உள்ளூராட்சி ஆணையாளரின் 2012 மே 29 ஆந் திகதிய 3/2012 ஆம் <u>இலக்க சுற்றறிக்கை</u> | பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட 20 ½ ஏக்கருக்கு மேற்பட்ட 06 காணிகளில் ஒவ்வொரு காணி அளவுகளிலும் 10 சதவீதமான காணிப்பங்கு சபையால் கையேற்கப்பட வேண்டிய போதிலும் அத்தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம்

158(1)(அ) ஆம் பிரிவு

நீண்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற ரூபா 201,598 தொகையான ஆதன வரி செலுத்தாத 15 வரியிறுப்பாளர்கள் தொடர்பாக முறையான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,499,218 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,257,385 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 241,833 தொகையான அதிகரிப்பு காணப்பட்டதுடன் அதற்கு பிரதானமாக மீண்டெழும் செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகள் ரூபா 1,250,561 இனால் குறைவடைந்தமை தாக்கமளித்திருந்தது.

### 2.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பெலிலென சுற்றுலா வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் ஓய்வறையினை நிர்மாணிக்கும் வேலைக்காக ரூபா 262,142 தொகை 2011 ஆகஸ்ட் 05 ஆம் திகதி கிரிகொடுதென்ன சிறிய விவசாய அமைப்பிற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2013 ஒக்டோபர் 17 வரை நிர்மாணவேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் முற்பணத் தொகையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந் நிலைமையின் கீழ் அந்த அமைப்பை கறுப்புப் பட்டியலில் இடுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டியபோதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காது வேறு வேலைகளின் நிர்மாண ஒப்பந்தம் தொடர்ச்சியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 2.4 செயற்பாடற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான 6 வாகனங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாது ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டு தரித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களை பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது அவை தொடர்பாக வேறு பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.5 உள்ளகக் கணக்காய்வு

1988 இன் (பிரதேச சபை) நிதி மற்றும் நிருவாக விதிக் கோவையின் 5(7) இன் படி காசு மற்றும் களஞ்சியங்கள் தொடர்பில் போதியளவான உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) வாகனக் கட்டுப்பாடு